தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6
ந.க. எண் 004263/இ1/2014 நாள் 25 .02.2014

பொருள் தமிழ்நாடு தொடக்கக் கல்வி – தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 25.02.2014ல் உள்ளிருப்பு வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் 26.02.2014ல் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டங்களில் கலந்துகொள்பவர்கள் மீது – மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைக் குறித்த அறிவுரைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை 1) தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளரின் கடிதம் நாள் 11.02.2014.

2) தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 004263/இ1/2014 நாள் 22.02.2014.

-----

மேற்காணும் பொருள் சார்ந்து, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் பார்வை 2ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1) தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 25.02.2014 அன்று நடத்தும் உள்ளிருப்பு போராட்டத்தின்போது பள்ளிக்கு வந்து பணிசெய்யாமல் இருக்கும் ஆசிரியர்கள் மீது அரசுப் பணியாளர் நன்னடத்தை விதி மற்றும் ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.
2) 26.02.2014 அன்று நடைபெறும் அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் ஊதியத்தினை நிறுத்தம் (No work No pay) செய்ய உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கவேண்டும். இவ்வூதியத்தினை கருவூலத்தில் செலுத்தும் விதத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.
3) அனைத்து பள்ளிகளும் மேற்படி நாட்களில் முழுமையாக செயல்படுவதையும், மாற்றுப்பணியில் ஆசிரியர்கள் பணிபுரிவதையும் உறுதி செய்துகொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.
4) மேற்படி நாட்களில் விடுப்பு விண்ணப்பம் பெறப்பட்டால் அதனை இரத்து செய்து ஆணை வழங்கவேண்டும்.
5) மேற்குறிப்பிட்ட இரு நாட்களிலும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்பவர்கள் பட்டியலை தத்தம் அலுவலகத்தில் வைத்துக்கொண்டு, அதன் எண்ணிக்கையை தொலைபேசியில் தெரிவிப்பதோடு அந்தந்த நாட்களில் காலை 11.00 மணிக்குள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இயக்குநருக்கு கிடைக்கும் விதத்தில் இ–மெயில் மூலம் அனுப்பவேண்டும்.
6) மேற்படி செயல்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் / உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது.

இணைப்பு – படிவம்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

பெறுநர் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

– இவ்விவரத்தை அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் உடனடியாக தெரிவிக்கப்படவேண்டும்.

நகல் – அரசு முதன்மைச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9 – தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

C:\Users\lenovo\Downloads\New Microsoft Office Word Document (2).docx

## படிவம்

## 25.02.2014 / 26.022014 அன்று தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியால் நடத்தப்படும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் விவரம்.

மாவட்டத்தின் பெயர் –

| வ.எண் | ஒன்றியம் | போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாற்றுப்பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | | |

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்

அலுவலகம் – 044 – 28202414
– 044 – 28216638

துணைஇயக்குநர்
(நிர்வாகம்) – 9750983004

C:\Users\lenovo\Downloads\New Microsoft Office Word Document (2).docx